# இலங்கையின் முருக வழிபாட்டில் யாத்திரைத் தலங்கள்

**வன்னமணி குணபாலசிங்கம்**
இந்து நாகரிக கற்கைகள் புலம்,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

கிழக்கிலங்கையிலே மிகத் தொன்மையானதும், புகழ்பெற்றதுமான பல முருகன் கோயில்கள் உள்ளன. வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே உகந்தைமலை வரைக்கும் இக்கோயில்கள் விரவிக் காணப்படுகின்றன. இங்குள்ள முருகன் கோயில்களை திருப்படைக் கோயில்கள், மலைக் கோயில்கள், உள்ளூர் கோயில்கள்(ஊர்க்கோயில்கள்) என மூவகையாகப் பாகுபடுத்தலாம். திருப்படைக் கோயில்கள் எனப்படுவன வேல்படையை மூலஸ்தானத்தில் வைத்து வழிபட்டு, பண்டைக்கால மன்னர்களின் ஆதரவுடனும் சீர்வரிசைகளுடனும் பரிபாலனம் செய்யப்பட்ட கோயில்கள் ஆகும். மலைக்கோயில்கள் எனப்படுபவை கிழக்கிலங்கையில் உள்ள மலைப்பிரதேசங்களில் முருகக்கடவுளுக்கு கோயிலமைத்து வழிபாடு இயற்றும் கோயில்களாகும். உள்ளூர் கோயில்கள் எனக் கருதப்படுபவை மேற்குறிப்பிட்ட இரு வகைக் கோயில்களிலும் அடங்காத ஏனைய கோயில்களைக் குறிக்கும்.

இலங்கையின் முருக வழிபாட்டுக் கேந்திரமாக அமைவது கதிர்காமத்தலமாகும். இத்தலத்தின் வழிபாட்டு மரபுகளை அடியொற்றிச் செய்யப்படுகின்ற வழிபாட்டுத்தலங்கள் கிழக்கிலங்கையில் பலவுள்ளன. கதிர்காம வழிபாட்டின் தாக்கம் இங்கு அதிகம் இடம்பெற்றமைக்குக் காரணம் இங்குள்ள முருக வழிபாட்டுத் தலங்கள் பல கதிர்காமத் தலத்துடன் கொண்டிருந்த உறவுகளே ஆகும். கதிர்காமத் தலத்திற்கும் கிழக்கிலங்கையின் முருக வழிபாட்டுத்தலங்களுக்கும் இடையிலான உறவுகளுக்கு அடிப்படை யாத்திரைப் பண்பாடாகும். கதிர்காமத்தில் இடம்பெறும் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் அங்கு பாத யாத்திரை செல்வது வழக்கம். குறிப்பாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களில் இருந்து அனேகமான மக்கள் அங்கு பாத யாத்திரை செல்வது மனங்கொள்ளத்தக்கது. இவர்கள் யாத்திரை செல்லும் போது தமது பிராந்தியத்திலுள்ள முருக வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்டு தமது யாத்திரையை திட்டமிடுவது குறிப்பிடத்தக்கது. கிழக்கிலங்கையில் யாத்திரை மையங்களாக விளங்கும் முருகன் கோயில்கள் பல. அவற்றுள் வெருகல் சித்திர வேலாயுதர் கோயில், மண்டூர் கந்தசுவாமி கோயில், சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில், உகந்தை முருகன் கோயில் முதலியன சிறப்பானவை ஆகும். கிழக்கிலங்கையின் முருக வழிபாட்டில் இவ்யாத்திரைத் தலங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள் : முருக வழிபாடு, யாத்திரை தலங்கள்